ஆக்கம்: ஆசிரியர் R.யசந்தன்
கே/ உந்துகொடை தமிழ் மகா வித்தியாலயம்

Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

## பகுதி - 1

**பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

1. ‘செய்வரால் இனம் உகளும் திருநாடு’ இங்கு செய் என்பதன் ஒத்தகருத்துச் சொல்.
   I. சேறு   II. நெல்   III. வயல்   IV. குளம்

2. ‘விரைவில் உருத்து எழுந்து பொர நினைவோ ’ இங்கு உருத்து என்பதன் ஒத்தகருத்துச் சொல்.
   I. ஒற்றுமை   II. உடன்பாடு   III. அமைதி   IV. சினந்து

3. ‘விரைவில் உருத்து எழுந்து பொர நினைவோ ’ இங்கு பொரல் என்பதன் ஒத்தகருத்துச் சொல்.
   I. பொறுமை   II. போர் செய்தல்   III. சலித்தல்   IV. சூழ்ச்சி செய்தல்

4. ‘உயர் வரைக்காடு என்ன?’ இங்கு வரை என்பதன் ஒத்தகருத்துச் சொல்.
   I. மலை   II. கரும்பு   III. சோளம்   IV. மூங்கீல்

5. ‘செயிர் அமரில் வெகுளி.’ இங்கு செயிர் என்பதன் ஒத்தகருத்துச் சொல்.
   I. கொடிய   II. அமைதியான   III. விரைவான   IV. மெதுவான

## பகுதி - 2

**சுருக்கமான விடை தருக.**

1. ‘பரிவுடன் மற்று இலை கூறும் பவன குமாரனை மலர்க்கை பணித்து நோக்கி’
   I. ‘பவன குமாரன்’ எனும் தொடர் யாரைக் குறிக்கின்றது?
   II. இங்கு பயின்று வந்துள்ள அணியினை இனங்காண்க.

2. ‘சூடுகின்ற துழாய் முடியோன் சுரருடனே முனிவர்களும் சுருதி நான்கும்’
   I. “துழாய் முடியோன்” என்பது யாரைக் குறிக்கின்றது?
   II. “சுருதி நான்கும்” எனும் தொடர் மூலம் குறிப்பிடப்படும் விடயங்கள் எவை?

3. “வாடுகின்ற மடப்பாவை தன் வரமும் என் வரமும் வழுவா வண்ணம்”
   I. ‘மடப்பாவை’ எனும் தொடர் மூலம் குறிப்பிடப்படுபவர் யார்?
   II. ‘என்வரம்’ என்று கூறுபவர் யார்?

4. “கோடுகின்ற மொழியவன் பால் எனைத் தூது விடுக இனி கொற்றவேந்தே”
   I. “கோடுகின்ற மொழியவன்” எனும் தொடர் யாரைக் குறிக்கின்றது?
   II. ‘கொற்றவேந்தே’ எனும் தொடரால் குறிக்கப்படுபவர் யார்?

5. “மேல் நாள், நம் உரிமை அறக் கவர்ந்த பெருந்துணைவன் உனை வெறாதவண்ணம் ”
   I. “பெருந்துணைவன்” எனும் தொடர் மூலம் குறிப்பிடப்படுபவன் யார்?
   II. “வெறாதவண்ணம்” என்பதன் பொருள் யாது?